T.C: 158

138/DD/19

| பதிவு எண் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMETAL EXAMINATIONS

# DEPARTMENTAL TEST FOR MEMBERS OF THE STAFF OF THE TAMIL NADU KHADI AND VILLAGE INDUSTRIES BOARD-FIRST PAPER ON GANDHIJI'S COLLECTED WORKS VOLUME – V (TAMIL)

## (TAMIL VERSION ONLY)

(Without Books)

Maximum Time : 2 hours

Maximum Marks : 80

## ***IMPORTANT INSTRUCTIONS***

## கொள்குறி வகை வினாத்தாள்

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB :** இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

3. விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (அ) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

   (ஆ) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

   (இ) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

   (ஈ) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

[Turn over

1. காந்தியடிகள் எந்த ஆண்டு தாம் முதல் முதலில் தறியில் நெய்ததாக கூறுகிறார்?

(A) 1915 (B) 1920

(C) 1925 (D) 1940

2. அடக்கத்திற்கும், அன்புக்கும், தருமத்திற்கும் மிகவும் பொருத்தமான தத்துவம் என்ன?

(A) பாசம் (B) கடமை

(C) ஆனந்தம் (D) சுதேசி

3. ஸ்காட்லேண்டின் ஹைலாண்டர்கள் என்னவென்று அழைக்கப்பட்டார்கள்?

(A) முட்டாள்கள் (B) புத்திசாலிகள்

(C) வேகமான கூட்டம் (D) பாவாடைப் பட்டாளம்

4. கிராமக் கைத்தொழில்கள் இல்லையானால் இந்திய விவசாயிகள் என்ன ஆவார்கள் என காந்தியடிகள் கூறுகிறார்?

(A) அழிந்து விடுவார்கள்

(B) சோம்பேறிகளாவார்கள்

(C) பட்டினியால் சாவார்கள்

(D) நகருக்கு போவார்கள்

5. மஸ்லின் புடவை கட்டிக்கொள்வது தமக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. கோடையிலும் கதர் புடவை கட்டுவது திருப்தியாக உள்ளது என சொன்னவர் யார்?

(A) செருபராணி

(B) தேவிஸ்வருபா

(C) சுந்தர ராணி

(D) ஸ்ரீமதி சரளா தேவி சௌத்ராணி

6. கோடிக்கணக்கான மக்களுக்கு வருமானம் வர உதவியாக இருக்கக் கூடிய ஒரே தொழில்

(A) விவசாயம் (B) கையினால் நூற்பது

(C) கனரக தொழில் வளர்ச்சி (D) பட்டுத் தொழில்

7. சுயராஜ்யத்தின் தைரியம் எதில் பொதிந்திருப்பதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) கைத் தொழிலில்

(B) கை வேலையில்

(C) கையினால் நூற்பதில்

(D) அதிகமாக பேசுவதில்

8. துணி விஷயத்தில் சுதேசியத்தை கைவிட்டதே இதற்குக் காரணமாக அமைந்துவிட்டது.

(A) சுதந்திரத்தை இழப்பதற்கு

(B) மில் துணி உற்பத்திக்கு

(C) துணி தட்டுப்பாட்டிற்கு

(D) பொருளாதார வளர்ச்சிக்கு

9. நாட்டின் முக்கியமான இரு தேவைகள் யாவை?

(A) மின்சாரமும் நீரும் (B) உணவும் உடையும்

(C) தானியங்களும் காய்கறிகளும் (D) பணமும் வீடும்

10. இந்தியாவின் பருத்தியை வெளியே அனுப்பி துணி தயாரித்து அதனை கப்பலேற்றிக் கொண்டு வருவதை காந்தியடிகள் என்ன வென்று கூறுகிறார்?

(A) புத்திசாலித்தனம் (B) கெட்டிக்காரத்தனம்

(C) பைத்தியக்காரத்தனம் (D) வியாபார உத்தி

11. லோகமான்யரின் நினைவை கொண்டாடுவதற்கான தகுதி யாருக்கு உள்ளதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) பம்பாய் மக்கள்
(B) சென்னை மக்கள்
(C) டெல்லி மக்கள்
(D) குஜராத் மக்கள்

12. இந்தியா எதன் மூலம் தன்னைத்தானே புனிதமாக்கிக்கொண்டு உயிர் பெறும் என காந்தியடிகள் கூறுகிறார்?

(A) உற்பத்தி மூலம்
(B) அடக்குமுறை மூலம்
(C) சுதந்திர வேட்கைமூலம்
(D) புலனடக்கம் மற்றும் தன்னலமறுப்பு

13. நூற்கும் ராட்டைக்காக எதை ஒப்புக்கொள்ள காந்திடிகள் கோருகிறார்?

(A) உழைப்புக்குள்ள பெருமையை
(B) வறுமையை
(C) பொருளாதர முன்னேற்றத்தை
(D) தன்னிறைவை

14. பட்டினிகிடக்கும் கோடிக்கணக்கான மக்களின் தேவையாது?

(A) சத்தளிக்கும் உணவு
(B) கபீர் தாசரின் கீதம்
(C) தூக்கம்
(D) விளையாட்டு

15. ஆண்களும், பெண்களும் தங்கள் குடிசைகளில் இருந்தபடியே எளிதாகச் செய்யக்கூடிய வேலை என்ன?

(A) விவசாயம்
(B) மாடு மேய்ப்பது
(C) தீப்பெட்டி செய்வது
(D) கையினால் நூற்பது

16. மக்களிடையே கூட்டுறவை பெறுவதற்கு எது அதிக சக்தி வாய்ந்த ஆயுதம்?

(A) கையினால் நூற்பது
(B) விவசாயம்
(C) கரும்புத் தொழில்
(D) பால் தொழில்

17. வறுமையிலும் கொடியதான நோய் எது?

(A) பட்டினி
(B) சோம்பல்
(C) வயிற்றுவலி
(D) முதுகுவலி

18. ஏழ்மையை போக்கக் கூடியது எது?

(A) ராட்டை
(B) சோம்பல்
(C) அறிவு சீர்திருத்தம்
(D) அறியாமை

19. விவசாயிகள் வருடத்தில் எத்தனை மாதங்கள் வேலையில்லாமல் இருப்பதாக காந்தியாடிகள் கூறுகிறார்?

(A) மூன்று மாதங்கள்
(B) இரண்டு மாதங்கள்
(C) நான்கு மாதங்கள்
(D) ஆறு மாதங்கள்

20. மிருகங்களிலிருந்து நம்மை வேறாக பிரித்துக்காட்டுவது எது?

(A) அறிவு
(B) கைத்திறன்
(C) சுகாதாரம்
(D) ஏழ்மை

21. அநேகருக்கு ஆனந்தமாக இருப்பதாக காந்தியடிகள் எதைக் குறிப்பிடுகிறார்?

(A) பேசுவது
(B) எழுதுவது
(C) கையால் இராட்டையில் நுற்பது
(D) ஓவியம் வரைவது

22. அன்னபூரணி என்று காந்தியடிகள் எதை குறிப்பிடுகிறார்?

(A) தெய்வத்தை
(B) இந்து மதத்தை
(C) தனது சிநேகிதரின் மகளை
(D) ராட்டையை

23. கோடிக்கணக்கான மக்களுக்கான ஒரே இரகத் தொழில் எது?

(A) நூற்பது
(B) பானை செய்வது
(C) சலவைத் தொழில்
(D) தோட்டம் செய்வது

24. கதர் மக்களுக்கு கௌரவமான உழைப்பைத் தருவதால் கதரின் விலையைப்பற்றி காந்தியடிகள் என்ன கூறுகிறார்?

(A) சிந்திக்கக் கூடாது
(B) சிந்திக்க வேண்டும்
(C) ஏற்றுக்கொள்ள வேண்டும்
(D) தவிர்க்க வேண்டும்

25. இந்தியாவும் உலகமும் காக்கப்படுவது எதில் இருக்கிறது என்று காந்தியடிகள் கூறுகிறார்?

(A) ராட்டையில்
(B) விஞ்ஞானத்தில்
(C) கல்வியில்
(D) உணவு பெருக்கத்தில்

26. எளிய தெய்வீகமான வாழ்விலிருந்து பிறக்கும் ரத்தம் சிந்தாத சமாதான வழியிலேயே இந்தியா செல்ல வேண்டும் என கூறியது யார்?

(A) சுப்பிரமணிய பாரதி

(B) அண்ணாதுரை

(C) மோதிலால் நேரு

(D) காந்தியடிகள்

27. பயனுள்ள பொருள் உற்பத்தி செய்யும் உடலுழைப்பு தொழில்களை விட்டுவிட்டு அதற்கு பதிலாக ஒரு பயனுமில்லாத உற்பத்தி செய்யாத அதிக பணச்செலவுள்ளதான விளையாட்டுகளையும் தேகப்பயிற்சிகளையும் ஏன் செய்ய வேண்டும் என வினாவியவர் யார்?

(A) காந்தியடிகள்

(B) கோபால கிருஷ்ண கோகலே

(C) தாதாபாய்நேளரோஜி

(D) லால் பகதூர் சாஸ்திரி

28. கிராம வாசிகளுக்கு வேலை தேடி கொடுப்பதற்கான வழி என காந்தியடிகள் குறிப்பிடுவது யாது?

(A) செய்துவந்த கைத்தொழில்களுக்கு புத்துயிர் அளிப்பது

(B) முழுநேரமும் விவசாயம் செய்ய வைப்பது

(C) நகரங்களுக்கு செல்லவைப்பது

(D) கல்வி அறிவு கொள்ளவைப்பது

29. கையினால் செய்த பொருள்களை வாங்காமல் ஆலைகளில் தயாரான பொருள்களையே வாங்கிக் கொண்டு போனால் என்னாகும்?

(A) கிராமங்கள் அழிந்து போகும்

(B) நகரங்கள் பெருகும்

(C) உற்பத்தி அதிகரிக்கும்

(D) விவசாயம் நசிந்துவிடும்

30. நம்மக்கள் குடிசைகளில் தயாரிக்கும் துணிகளை நாம் வாங்குவதை காந்தியடிகள் எவ்வாறு குறப்பிடுகிறார்?

(A) பொது கடமை

(B) தெய்வீக கடமை

(C) கெட்டிக்காரத்தனம்

(D) நல்ல முதலீடு

31. எல்லோரும் கதர் அணிந்தால் நாம் செலவழிக்கும் பணத்தில் பெரும்பகுதி யாரை அடைகிறது?

(A) வியாபாரி (B) நெசவாளி

(C) நூற்போர் (D) கடைமுதலாளி

32. இவர்களும் இரவு பகல் ராட்டையில் வேலை செய்து அதைப்பற்றியே சிந்தித்தும் வராவிட்டால் ராட்டையில் அபிவிருத்தி எற்பட்டிருக்க முடியாது?

(A) ஆண்கள் (B) பெண்கள்

(C) மாணவர்கள் (D) விவசாயிகள்

33. பாட்னாவின் விசேஷ கைத் தொழில்கள் யாவை?

(A) கைநெசவும் விளையாட்டு, பொம்மை தயாரித்தலும்

(B) மட்பாண்டம் செய்தல், செருப்பு தயாரித்தல்

(C) சோப்பு செய்தல், பிளாஸ்டிக் தொழில்

(D) பால் தொழில், விவசாயம்

34. எந்த வேலையும் இல்லாமல் கோடிக்கணக்கான ஆண்களும், பெண்களும் எத்தனை மாதங்கள் சோம்பலாக இருந்து வருவதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) ஒரு மாதம் (B) நான்கு மாதங்கள்

(C) ஐந்து மாதங்கள் (D) பத்துமாதங்கள்

35. இந்தியாவின் கோடிக்கணக்கான குடும்பங்களில் எவ்விதம் தங்கள் ஆகாரத்தை தாங்களே சமைத்து சாப்பிடுகிறார்களோ அவ்வாறே இதையும் செய்ய வேண்டும்,

(A) தோட்டம் போட வேண்டும்

(B) கைத்தொழில் செய்ய வேண்டும்

(C) தேகப்பயிற்சி செய்ய வேண்டும்

(D) கதரை உற்பத்தி செய்து உபயோகிக்க வேண்டும்

36. கையினால் நூற்பதை எவ்வாறு கருதவேண்டும் என காந்தியடிகள் கூறுகிறார்?

(A) மகிழ்ச்சியாக

(B) தியாகமாக

(C) கடமையாக

(D) தர்மமாக

37. உண்மையான பொருளாதாரப் பரிகாரம் எது என காந்தியடிகள் கூறுகிறார்?

(A) விவசாயம்

(B) மாட்டுப்பண்ணை

(C) கோழிப்பண்ணை

(D) கதர்

38. சுதேசியமும் தேசியமும் பற்றி காந்தியடிகள் எழுதி வந்த பத்திரிகையின் பெயர் என்ன?

(A) இன்மை இந்தியா

(B) நாளைய இந்தியா

(C) நேற்றைய இந்தியா

(D) யங் இந்தியா

39. நம் நாட்டிலேயே போதிய அளவு தயாரித்துவிடக்கூடிய சரக்கு எதையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது, அவ்வாறு செய்தால் அது

(A) பாவச் செய்கை

(B) வியாபார உத்தி

(C) வணிக உத்தி

(D) பொருளாதார உத்தி

40. மக்களுக்கு உடனே கொடுக்கக்கூடிய மிக பயனுள்ள வேலை எது?

(A) கையால் நூற்றல்

(B) தையல் பயிற்சி

(C) எழுத்துப்பயிற்சி

(D) பாய்பின்னும் பயிற்சி

41. சுதேசி தர்மத்தை நிறைவேற்றி வைப்பதற்கு அத்யாவசியமான முதல் காரியம் எது?

(A) கதர் (B) நெசவு

(C) உழவு (D) வியாபாரம்

42. சுயராஜ்யத்தை நோக்கி முன்னேறுவதற்கு எது முட்டுக்கட்டையாக உள்ளது?

(A) உழைப்பின்மை

(B) போதிய அறிவின்மை

(C) காலமின்மை

(D) நம்பிக்கையின்மை

43. வர்த்தக வகுப்பாளரிடம் முக்கியமாக இருக்க வேண்டியது என்ன என காந்தியடிகள் கூறுகிறார்?

(A) உழைப்பு (B) நாணயம்

(C) நம்பிக்கை (D) ஒற்றுமை

44. பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு ராட்டைகள் கொண்டு வேலையும் அதைக் கொண்டு சோறும் கிடைக்க எதை பகிஷ்கரிக்க வேண்டும்?

(A) கதரை (B) பட்டினை

(C) அன்னிய துணியை (D) பாலிஸ்டர் துணியை

45. மிக உயர்ந்த பொருளாதார நன்மையளிக்கும் நிரந்தர காரியங்கள் யாவை?

(A) கதர் உற்பத்தி (B) தோல் உற்பத்தி

(C) காப்பி உற்பத்தி (D) சோப்பு உற்பத்தி

46. மக்கள் தங்கள் குடிசைகளிலேயே கையினால் நூற்பதன் மூலம் கதரை உற்பத்தி செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?

(A) பாமர மக்களின் பொருளாதார நன்மை

(B) வர்த்தக மேன்மை

(C) அன்னிய துணி பகிஷ்கரிப்பு

(D) சுதேசி வளர்ச்சி

47. இங்கிலாந்தைத் தவிர இந்தியாவுக்கு அதிக அளவில் துணி இறக்குமதி செய்த மற்றொரு நாடு எது?

(A) ரஷ்யா
(B) ஜப்பான்
(C) இலங்கை
(D) பர்மா

48. உலகத்தில் அதிக கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் யார்?

(A) விவசாயிகள்
(B) வியாபாரிகள்
(C) மருத்துவர்கள்
(D) மாணவர்கள்

49. தன்னுடைய முக்கியமான தொழிலுக்கு பாதுகாப்பு அளித்துக் கொள்ளுவது எதற்கு ஈடானது?

(A) பிறப்புரிமை
(B) பாதுகாப்புரிமை
(C) முன்னுரிமை
(D) தனியுடமை

50. இந்தியாவில் உபயோகித்துக் கொள்ள வேண்டிய சக்தி என எதை காந்தியடிகள் கூறுகிறார்?

(A) நீராவி சக்தி
(B) மின்சார சக்தி
(C) ஆயுத சக்தி
(D) வற்றாத மனித சக்தி

51. பட்டினியை பெருமளவு போக்குவதற்கான அபார சக்தி எதில் இருக்கிறது?

(A) கதரில்
(B) மீன்பிடித் தொழில்
(C) நெசவுத் தொழிலில்
(D) கருமாரத் தொழிலில்

52. ஒவ்வொரு வீட்டிலும் எது வேலை செய்தால் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாது போகும்?

(A) தையல் இயந்திரம்
(B) மாவு அரைக்கும் இயந்திரம்
(C) துணி துவைக்கும் இயந்திரம்
(D) ராட்டை

53. கதரை மில் துணியுடன் ஒப்பிடுவது எதற்கு நிகரானது?

(A) மனிதரையும் ரோபோட் இயந்திரத்தையும்
(B) மாட்டையும் ஆட்டையும்
(C) சிங்கத்தையும் யானையையும்
(D) மனிதனையும் மிருகத்தையும்

54. அன்னிய துணி வியாபாரிக்கு நாட்டில் நல்ல இடம் தேடிக் கொடுத்தது எது?

(A) கிழக்கிந்திய கம்பெனி
(B) பிரெஞ்சு கம்பெனி
(C) மக்களின் தேவை
(D) பொதுமக்களின் அசிரத்தை

55. அன்னிய நாட்டு துணி வகைகள் மக்களை என்ன செய்கின்றன?

(A) மகிழ்விக்கின்றன
(B) கோபப்படுத்துகின்றன
(C) செல்வந்தர்களாக்குகின்றன
(D) ஏழ்மைப்படுத்துகின்றன.

56. சந்திக் காலம் என்று காந்தியடிகள் எதைக் குறிப்பிடுகிறார்?

(A) சுதந்திரம் பெறுவதற்கு முன்பான காலம்
(B) மாலை நேரம்
(C) காலை நேரம்
(D) இரவு நேரம்

57. ஓர் ஏழையால் நூற்கப்பட்ட கதர் நூலில் என்ன உள்ளதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) உயிர்
(B) முறுக்கு
(C) மென்மை
(D) உறுதி

58. சோம்பலையும், வேலையில்லா திண்டாட்டத்தையும், ஏழ்மையையும் ஒருசேர போக்கக் கூடியதாக இருப்பது எது?

(A) விவசாயம்
(B) கதர் தொழில்
(C) மாடு வளர்த்தல்
(D) பழ வியாபார செய்தல்

59. கதர் இயக்கத்தில் அதிக ஈடுபாடு உள்ளவர்களை காந்தியடிகள் எவ்வாறு கூறுகிறார்?

(A) காங்கிரஸ்காரர்
(B) கதர் பக்தர்
(C) சாமானியர்
(D) தேசாபிமானி

60. தாவர சாஸ்திர ஆராய்ச்சிக்கு பயன்படும் புதிய கருவிகளை கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?

(A) ஜகதீச சந்திர போஸ்
(B) சர் சி.வி. ராமன்
(C) விக்ரம் சாராபாய்
(D) ரவீந்திரநாத் தாகூர்

61. ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி என்பவர் யார்?

(A) கதர் நிபுணர்களில் ஒருவர்
(B) வியாபாரி
(C) விவசாயி
(D) கிராமவாசி

62. பஞ்சை சரியாக பட்டையிடாமல் ராட்டையில் நுற்றால் என்னவாகும்?

(A) உற்பத்தி வேகம் குறையும்
(B) உற்பத்தி கூடும்
(C) துணி தரமிருக்காது
(D) துணி தடிமனாகும்

63. விஞ்ஞான உள்ளம் பற்றற்றதாக இல்லாமல் போனல் என்னவாகும்?

(A) பைத்தியமாகும்
(B) அறிவு கூர்மை பெறும்
(C) நாட்டுக்கு கேடுவரும்
(D) முன்னேற்றம் இருக்காது

64. கதரை எல்லோரும் உபயோகிக்கச் செய்வதற்கு பொறுப்பு வாய்ந்தவர்கள் யார்?

(A) கதர் ஊழியர்கள்
(B) அரசு ஊழியர்கள்
(C) வங்கி ஊழியர்கள்
(D) தபால் ஊழியர்கள்

65. உங்கள் மடிக்கு வரும் ஒவ்வொரு காலணாவும் எப்படி எங்கிருந்து வருகிறது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கூறியவர் யார்?

(A) காந்தியடிகள்
(B) ஒஷோ
(C) விவேகானந்தர்
(D) நேருஜி

66. பாமரர்களுக்கு செய்யும் சேவை யாது?

(A) தினமும் கோவிலுக்கு போவது
(B) தினமும் பணி செய்வது
(C) பாமரர்களுக்கு மருத்துவம் செய்வது
(D) தினமும் 1/2 மணி நேரம் நூற்பது

67. பொதுக் கூட்டுறவு வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது எது?

(A) உழைப்பு
(B) செல்வம்
(C) ஒற்றுமை
(D) ராட்டை

68. கதர் இல்லாத சுதேசி எதைப்போன்றது?

(A) இலையில்லாத மரத்தைப் போன்றது

(B) நிலவில்லாத வானம் போன்றது

(C) பூ இல்லாத தோட்டம் போன்றது

(D) உயிரில்லாத உடலைப் போன்றது

69. கடவுளைக் காண்பதற்கு ஒருவர் எதை இழக்க வேண்டும்?

(A) அகந்தையை

(B) நம்பிக்கையை

(C) இரக்கத்தை

(D) பணத்தை

70. சர்க்கா மண்டலம் எதற்காக உருவாக்கப்பட்டது?

(A) கையால் நூற்பவர்களை ஒருங்கிணைக்க

(B) விளையாட்டை மேம்படுத்திட

(C) மில்துணி உற்பத்தி பெருக்கிட

(D) சுதேசி தொழில் வளர்த்திட

71. இராட்டையில் கதர் சரியாக சுழலாது போனால் என்னாகும்?

(A) நூல் குறையும்

(B) மனித சக்தி அதிகமாக வீணாகும்

(C) நூல் அறுந்து போகும்

(D) ராட்டை உடையும்

72. தக்ளி சரியானபடி பயன்படுத்தப்படுமானால் அது எதற்கு சமமானது?

(A) இயந்திரம்

(B) மின் இயந்திரம்

(C) ராட்டை

(D) நெசவு இயந்திரம்

73. காந்தியடிகள் கதர் இயக்கத்தை எந்த ஆண்டு தொடங்கினார்?

(A) 1947

(B) 1937

(C) 1927

(D) 1918

74. ராட்டையின் மத்தியஸ்தானம் எது?

(A) கிராமங்கள்
(B) நகரங்கள்
(C) பெரு நகரங்கள்
(D) சிறு நகரங்கள்

75. ஆயுதங்கள் ஹிம்சையின் சின்னமாக இருக்கின்றன. ராட்டை எதன் சின்னமாக இருக்கிறது?

(A) அகிம்சையின்
(B) துணியின்
(C) சுதந்திரத்தின்
(D) ஏழையின்

76. மில்களில் தீட்டிய வெள்ளை அரிசி ஆரோக்கியத்திற்கு என்ன செய்யும்?

(A) கேடு செய்யும்
(B) நன்மை செய்யும்
(C) ஊட்டமளிக்கும்
(D) ஊட்டக்குறைவை ஏற்படுத்தும்

77. கதரில் எந்த துணி வகைக்கு காந்தியடிகள் அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார்?

(A) கதர் பருத்தி
(B) கதர் கம்பளி
(C) கதர் பட்டு
(D) கதர் பாலியஸ்டர்

78. ராட்டைகளே நம் போர் ஆயுதங்கள், நூற்கண்டுகளே தோட்டாக்கள் என கூறியவர் யார்?

(A) மௌலானா முகமது அலி
(B) காந்தியடிகள்
(C) நேரு
(D) ராஜாஜி

79. இந்திய விவசாயியின் இயற்கையான துணைத் தொழில் எது?

(A) மீன் பிடித் தொழில்
(B) தோட்டம் போடுதல்
(C) ராட்டைத் தொழில்
(D) கருமாரத் தொழில்

80. ராட்டையை சரியானபடி பராமரித்து வந்தால் நூற்கும் திறன் எவ்வாறு இருக்கும்?

(A) இருமடங்காகும்
(B) மாற்றம் இருக்காது
(C) மூன்று மடங்காகும்
(D) நான்கு மடங்காகும்.

Tc.158

138/DD/19

| பதிவு எண் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

**DEPARTMETAL EXAMINATIONS**

**DEPARTMENTAL TEST FOR MEMBERS OF THE STAFF OF THE TAMIL NADU KHADI AND VILLAGE INDUSTRIES BOARD-FIRST PAPER ON GANDHIJI'S COLLECTED WORKS VOLUME – V (TAMIL)**
**(TAMIL VERSION ONLY)**

(With Books)

Maximum Time : 30 minutes    Maximum Marks : 20

## ***IMPORTANT INSTRUCTIONS***

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் பதில் அளிக்கவும். **(4 × 5 = 20)**

1. அகில இந்திய நூற்போர் சங்கத்தின் தர்மகர்த்தாவின் தகுதிகள் யாவை?

2. கதரின் வேலை என்ன?

3. உண்மை சுயராஜ்யமும் சத்துள்ள ஆட்சி முறையும் யாது?

**[Turn over**

4. நூற்பதினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

5. மில்லும், ராட்டையும் பற்றி காந்தியடிகள் கூறுவன யாவை?

6. கதர் விஞ்ஞானம் தொடர்பாக கதர் ஊழியரை பரீட்ச்சிக்க காந்தியடிகளால் கேட்கப்பட்ட கேள்விகள் யாவை?